www.Padasalai.Net

த.த.செ.ச
1946 முதல்

# தமிழ்நாடு தலைமைச் செயலகச் சங்கம்

தலைமைச் செயலகம், சென்னை-600 009.
தொலைபேசி : 044-2566 5200 நீட்சி : 5200

**வெங்கடேசன். கு**
தலைவர்
94445 83809

**ஹரிசங்கர். சு**
செயலாளர்
98404 25028

**லெனின். இரா**
இணைச் செயலாளர் (பொது)
95008 55503

**ஜீவன். அ**
இணைச் செயலாளர் [வி (ம) ப]
98846 96619

**பிரபா. சே**
பொருளாளர்
94448 76761

**கடித எண் 72 / தசெச / 2024, நாள் 23-04-2024**

பெறுநர்
அரசு முதன்மைச் செயலாளர்,
நிதித் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை-600 009.

அய்யா,

பொருள் நடப்பு நிதியாண்டிலிருந்து வருமான வரி பிடித்தம் IFHRMS மென்பொருள் மூலமாக மேற்கொள்ளுதல் – நடைமுறையில் உள்ள சிக்கல்களைக் களையக் கோருதல் தொடர்பாக.

-:o0o:-

தமிழ்நாடு அரசுப் பணியில் உள்ள ஆசிரியர்கள்-அரசு பணியாளர்களுக்கு IFHRMS என்ற மென்பொருள் மூலமாக சம்பளப் பட்டியல்கள் பெறப்பட்டு மாதாந்திர சம்பளம் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு வருகிறது. இதில் புதிய நடைமுறையாக இந்த நிதியாண்டு முதல், வருமான வரிப் பிடித்தமானது ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேலாண்மை மென்பொருள் (IFHRMS) மூலமாக கணக்கிட்டு பிடித்தம் செய்யப்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதில் பணியாளர்கள் தங்களது விருப்பத்தின் அடிப்படையில், பழைய நடைமுறை / புதிய நடைமுறை (Old Regime / New Regime) என தேர்வு செய்ய அறிவுறுத்தப்பட்டனர். இதனை தேர்வு செய்யாத பணியாளர்களுக்கு New Regime என்ற அடிப்படையில் வருமான வரி பிடித்தம் செய்யப்படும் என தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

ஆனால், நடைமுறையில் பணியாளர்கள் பல்வேறு இன்னல்களை எதிர்கொண்டு வருகிறார்கள் என்பதுதான் யதார்த்தம்.

- ✓ தாங்கள் தேர்வு செய்த விருப்பத்தின் அடிப்படையில், வருமான வரி பிடித்தம் செய்யாமல், அளவுக்கு அதிகமாக, சில பணியாளர்களுக்கு அனைத்துப் பிடித்தங்களையும் கழித்துவிட்டு, அவர்கள் வாங்கும் மாதாந்திர ஊதியத்தினைவிட அதிகமாக வருமான வரி பிடித்தம் செய்யும் நிலை எழுந்துள்ளது.
- ✓ வரி விலக்குப் பெற்ற பல்வேறு இனங்களை, உதாரணமாக வீட்டுக் கடன் அசல் / வட்டி உள்ளிட்டவைகளைக் கூட பதிவேற்றம் செய்வதற்கான உரிய வசதிகள் IFHRMS மென்பொருளில் செய்யப்படவில்லை.

www.Padasalai.Net

- ✓ இதுநாள் வரை / இனிமேலும் வருமான வரி பிடித்தம் செய்யும் வரம்பிற்குள் வராத அடிப்படைப் பணியாளர்களுக்குக் கூட அதிக அளவில் வருமான வரி பிடித்தம் செய்யப்படும் நிலை உருவாகி உள்ளது.
- ✓ பல்வேறு பணியாளர்கள் வீட்டுக் கடன் உள்ளிட்ட தனிப்பட்ட வங்கிக் கடன்களை மாதாந்திர தவணையில் செலுத்தும் நிலையில் உள்ளனர். இவ்வாறு, மென்பொருளானது எதையும் கருத்தில் கொள்ளாமல், எந்த அடிப்படையுமின்றி பிடித்தம் செய்தால், அவர்கள் மாதாந்திர தவணையினை கட்டுவதற்கு அவர்களது வங்கிக் கணக்கில் உரிய தொகை இருக்காது.
- ✓ துறைகளில் பட்டியல் பிரிவில் பணியாற்றும் பணியாளர்கள் IFHRMS மென்பொருள் இப்பணிகளைச் செய்வதில் அவர்களால் உரிய சம்பளப் பட்டியலைத் தயாரிக்க இயலாத சூழ்நிலையில் உள்ளனர்.
- ✓ மேலும், தங்களது மாதாந்திர வருமான வரிப் பிடித்தத்திற்கு மிகையாக, மிக அதிகமாக தற்போது IFHRMS மென்பொருள் மூலமாக பிடித்தம் செய்யப்பட்டால், அத்தொகையினை மீளப் பெறுவதற்கு இரண்டாண்டுகளுக்கு மேலாகும். இதனால், கடுமையான நிதி நெருக்கடிக்குப் பணியாளர்கள் ஆட்படுவார்கள்.
- ✓ அரசுப் பணியாளர்களைப் பொறுத்தவரையில், தங்களது ஊதியத்திற்கு ஏற்ற வருமான வரியினை முழுமையாகச் செலுத்தக்கூடியவர்கள்.

கடந்த ஆண்டில் பணியாளர் செலுத்திய வருமான வரித் தொகையினை அடிப்படையாகக் கொண்டு, அத்தொகையினைப் பத்தால் வகுத்து, அதனை மாதாந்திர வருமான வரி பிடித்தம் மேற்கொள்வதே சரியான நடவடிக்கையாக அமையும். எனவே, உடனடியாக IFHRMS மென்பொருள் மூலமாக வருமான வரிப் பிடித்தத்தினை மேற்கொள்வதில் ஏற்பட்டுள்ள குழப்பத்தினைக் களைவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு, உரிய வருமான வரியினை மட்டுமே பிடித்தம் செய்து, இந்த மாத சம்பளத்தினை பணியாளர்கள் சிரமமின்றி பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

23/4/2024
செயலாளர்

23/4/24
தலைவர்